DISTRICT MUNSIF COURT, UTHAMAPALAYAM

Present : Thiru. A. Saravana Senthil Kumar, B.Com., B.L.,
District Munsif, Uthamapalayam.

**OS.No. 98/2019**

**(CNR.No: TNTH06-000160 -2019 )**

| | | | |
|---|---|---|---|
| Name | : ராசுத்தேவர் | Religion | : |
| Father's Name | : | Occupation | : |
| Caste | : | Place | : |
| Age | : | **DW1** | |

---

நாள் :29.01.2024

**வாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

**1)** பிவாசாஆ 4 ஆவணம் புல எண். 453/11 சர்கார் புறம்போக்கு சந்து என்று உள்ளது என்றும், நான் நீதிமன்றம் மூலம் பரிகாரம் தேடிக்கொள்ளக்கூறியும் வட்டாட்சியரால் வழங்கப்பட்ட குறிப்பாணை என்றால் சரிதான். மேற்படி குறிப்பாணையின் படி நான்இந்த நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண். 185/2015 தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். நான் மாண்புமிகு உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்த ரிட்மனுவில் வட்டாட்சியர் மேற்கண்டவாறு நடவடிக்கை எடுத்து எனக்கு குறிப்பாணை வழங்கிய பின்னரும் வட்டாட்சியர் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று பொய்யான தகவலுடன் அவிடவிட்டு தாக்கல் செய்தேன் என்றால் அதுபற்றி ஞாபகமில்லை.

2) பிவாசாஆ 1 கிரைய ஆவணம் யார் பெயரில் கிரையம் பெறப்பட்ட ஆவணம் என்றால் எனது தகப்பனார் வீரணத்தேவர் பெயரில் கிரையம் பெறப்பட்ட ஆவணம் ஆகும். பிவாசாஆ1 ஆவணத்தில் சொத்து விபரத்தில் நான்குமால் விபரமாக தெற்கு மால் என்பது ராமசாமி வீடும், கிழமேல் வீதியும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி கிழமேல் வீதியும் என்பது

சர்வேஎண். 453/39 என்று சொன்னால் அதுபற்றி எனக்கு ஞாபகமில்லை. மேற்படி கிழமேல் வீதி வாதியின் மாதிரி வரைபடத்தில் CG1GH1 என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அதுபற்றி எனக்கு ஞாபகமில்லை. மேற்படி கிழமேல் வீதியை மறைத்து எனது இடத்தின் கிழக்கு ஓரத்தில் சுவர் வைத்துள்ளேன் என்றால் சரிதான், அந்த சுவர் எனது இடத்தில் தான் வைத்துள்ளேன்.

3) மேற்படி சுவர் வைத்துள்ள இடம் எனது இடம் என்று வழக்கிற்காக பொய்யாக கூறுகிறேன் என்றும் அது பொதுசந்து பகுதி என்று சொன்னால் பொது சந்து பகுதியாகத்தான் இருந்தது வழக்கு தாக்கல் செய்து எனது பத்திரத்தின் படி எனக்கு பாத்தியப்பட்டதாக தீர்ப்பு வாங்கியுள்ளேன். நான் கூறுவது போன்று எந்த தீர்ப்பும் எனக்கு சாதகமாக ஏற்படவில்லை என்றும், வழக்கிற்காக பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. மேற்கண்டவாறு நான் கட்டியுள்ள சுவர் மாதிரி வரைபடத்தில் CH1 என்று வாதி காட்டியுள்ளார் என்றால் ஞாபகமில்லை. மேற்கண்வாறு சுவர் கட்டியதன் மூலம் மேற்படி சந்து பகுதியை எனது நிலத்துடன் ஆக்கிரமிப்பு செய்து சுவர் கட்டியுள்ளேன் என்றால் சரியல்ல, பத்திரத்தின் படி எனக்கு பாத்தியமாக உள்ளது. எந்த பத்திரத்தின் அடிப்படையில் எனக்கு பாத்தியம் என்றால் பிவாசாஆ 1 கிரைய பத்திரத்தின் படி மேற்படி சந்துப்பகுதியும் எங்களுக்கு பாத்தியம் என்று கூறுகிறேன்.

4) நான் கூறுவது போல் பிவாசாஆ 1 ஆவணத்தில் சர்வே எண்,. 453/39 எங்களுக்கு கிரைய பாத்தியம் ஏற்பட்டதாக எந்த குறிப்பும் இல்லை என்றும், வழக்கிற்காக பொய்யாக கூறுகிறேன் என்று சொன்னால் சரியல்ல. மேற்கண்டவாறு மாதிரிவரைபடத்தில் CH1 பகுதியில் நான் அமைந்துள்ள சுவரை அப்புறப்படுத்த நான் கடமைபட்டுள்ளேன் என்றும், அவ்வாறு வாதி கோரியுள்ள 7 வது பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கது என்றால் சரியல்ல. எனது எதிர்வழக்குரை 5 ம் பாராவிலும், எனது முதல் விசாரணை வாக்குமூலம் பாரா 3 லும் 1 ம் லக்க சொத்திற்கு வடக்கே சர்வே எண். 453/39 ல் கட்டுப்பட்ட சந்துபாதையும், அதை அடுத்த எனக்கும், 2 ம் பிரதிவாதிக்கும் பாத்தியப்பட்ட சர்வே எண். 453/12,13 ஆதியில் காலியிடம் என்று

கூறியுள்ளேன் என்றால் சரிதான்.

5) வாதிகளின் வீட்டின் வடக்கு மாலாக சர்வே எண். 453/39 என்று காட்டி மல்லிகாபுரம் கிராம நிர்வாக அலுவலர் வாசாஆ 36 சான்று வழங்கியுள்ளார் என்றால் அது தவறானதாகும். நான் எந்த சர்வே எண் உள்ள வீட்டில் குடியிருந்து வருகிறேன் என்றால் சர்வே எண். 453/10,453/13 சர்வே எண்களில் உள்ள வீட்டில் குடியிருந்து வருகிறேன். எனது தம்பி எந்த சர்வே எண்,. வீட்டில் குடியிருந்து வருகிறார் என்றால் சர்வே எண்., 453/12 ல் உள்ள வீட்டில் குடியிருந்து வருகிறார். சர்வே எண். 453/12 முன்னதாக மாட்டுக்கொட்டமாக இருந்து என்றால்சரிதான். நான் குடியிருக்கும் சர்வே எண். 453/13 ல் உள்ள வீட்டிற்கு கிழக்குபார்த்து வாசல் இருந்தது என்றால் சரிதான். பிவாசாஆ 1 ஆவணத்தின் சொத்து விபரத்தில் 2 தாக்குகள் காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

6) மேற்படி ஆவணத்தில் 1வது தாக்கு என்பது சர்வே எண்., 453/13 என்றால் சரிதான். 2வது தாக்கு என்பது சர்வே எண். 453/12 என்றால் சரிதான். பிவாசாஆ 1 ஆவணத்தின் சொத்து விபரத்தில் பிரிவினையில்லாத 3 ல் 2 பாகம் கிரையம் செய்யபடுவதாக காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். பிவாசாஆ 1 கிரைய ஆவணத்தின் படி எனது தகப்பனார் கிரையம் பெற்ற சொத்து சர்வே எண். 453/12 மற்றும் சர்வே எண். 453/13 ஆகியவை மட்டும் என்றால் சரிதான். பிவாசாஆ 1 ஆவணத்தின் மூலம் சர்வே எண், 453/11 எனது தகப்பனாரால் கிரையம் பெறப்படவில்லை என்றால் சரியல்ல. பிவாசாஆ 1 ஆவணத்தில் 3 வது தாக்கு எதுவும் இல்லை என்றால் சரிதான். சர்வே எண்., 453/11 எனக்கு எந்த விதத்திலும் பாத்தியம் இல்லாத நிலையில் பொது பாத்தியம் இருந்ததை வட்டாட்சியர் எனக்கு பட்டா வழங்க பரிந்துரை செய்த உத்தரவு சட்டப்படி செல்லத்தக்கதில்லை என்று சொன்னால் சரியல்ல. அத்தகைய தவறான பரிந்துரையின் பேரில் கோட்டாட்சியர் 12.01.2017 ம் தேதி எனக்கு வழங்கிய உத்தரவு செல்லத்தக்கத்தில்லை என்று சொன்னால் சரியலல.

7) மேற்படி 12.01.2017 ம் தேதி கோட்டாட்சியர் வழங்கிய உத்தரவு

செல்லத்தக்கதில்லை என வாதி கோரியுள்ள 2 வது பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கது என்றால் சரியல்ல. மேற்படி 12.01.2017 ம் தேதி கோட்டாட்சியர் வழங்கிய உத்தரவிற்கு எதிராக வாதிகள் மாவட்ட வருவாய் அலுவலரிடம் தாக்கல் செய்த மேல்முறையீட்டு மனுவின் மீது 14.03.2019 ம் தேதி பிறப்பிக்கப்பட்ட உத்தரவு செல்லத்தக்கதில்லை என்று சொன்னால் சரியல்ல. இது குறித்து வாதி கோரியுள்ள 3 வது பரிகாரமும் வாதிக்கு கிடைக்கத்தக்கது என்றால் சரியல்ல. அவ்வாறு வாதிகள் கோரியுள்ள 2, 3 பரிகாரங்களின் அடிப்படையில் சர்வே எண். 453/11 யைப்பொறுத்து எனது பெயரிலுள்ள பதிவை நீக்கப்படவேண்டும் என்றும், முன்பு இருந்தபடியே சந்து பாதை என பதிவு செய்யப்படவேண்டும் என்றும் வாதி கோரியுள்ள பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கது என்றால் சரியல்ல.

(ஒ.ம்) A. சரவணசெந்தில்குமார், B.Com., B.L.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
உத்தமபாளையம்.